

திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் ஒன்றிய கழகச் செயலாளர் ப.ச.கமலேஷ் ஏற்பாட்டில் கழக நிர்வாகிகளுக்கு பரிசு மற்றும் இனிப்பை மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் வழங்கினார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அ. கிருஷ்ணசாமி, பொதுக்குழு உறுப்பினர்கள் எம். முத்தமிழ் செல்வன், வி.குமார் , மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கிளைக் கழகச் செயலாளர்கள் கழக மூத்த முன்னோடிகள் பலர் உள்ளனர்.

மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் 1500 பேருக்கு நலஉதவி வழங்குகிறார்!

மாநகரப் பிரதிநிதி ஆர்.பன்னீர்செல்வம் தாயார் ஆர்.முனியம்மாளின் 3 ஆம் ஆண்டு நினைவு நாள்!

எஸ்.ஆர்.ராஜா – இ.கருணாநிதி – க.வசந்தகுமாரி – கோ.காமராஜ் பங்கேற்பு! மாடம்பாக்கம் ஆ.நடராஜன் தலைமை!

சென்னை, நவ. 06 -

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் மாநகரம், நினைவில் வாழும் எம்.வி.ராமச்சந்திரனின் மனைவியும், தாம்பரம் மாநகரக் கழகப் பிரதிநிதி ஆர்.பன்னீர்செல்வம் தாயார் ஆர்.முனியம்மாள் அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு முன்னிட்டு பார் வையற்றோர், மாற்றுத்திற னாளிகள் மற்றும் ஆதர வற்றோர்களுக்கும், பகுதி வாழ் மக்கள் 1500 ஏழை,



எளியோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நாளை (07.11.2026 - சனிக் கிழமை) காலை 10 மணி அளவில், பெரியார் நகர் மெயின் ரோடு, மாடம்பாக் கத்தில் நடைபெறுகிறது.

தாம்பரம் கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர், மாநக ராட்சி நகரமைப்பு குழுத் தலைவர் மாடம்பாக்கம் ஆ.நடராஜன் எம்.சி. தலைமை வகிக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் மாவட் டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் தா. மோ.அன்பரசன் கலந்து கொண்டு ஏழை, எளியவர் களுக்கு நலத்திட்ட உதவி கள் வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் தாம்ப ரம் மாநகரக் கழகச் செயலா ளர் எஸ்.ஆர்.ராஜா, மாவட் டத் துணைச் செயலாளர் இ.கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந் தகுமாரி, தாம்பரம் மாநக ராட்சி துணை மேயர் கோ.காமராஜ், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், திருநீர்மலை த.ஜெயக்கு மார், அ.தமிழ்மாறன், ஆர். எஸ்.கிருத்திகா தேவி, எஸ். இந்திரன், பொன்.சதாசி வம், வி.ஜெயராமன், இ. எம்.சாம்சன், டி.ராஜாராம், எஸ்.விமலா, ரா.நவீன், எஸ். வேலவன், ஜெ.செல்வம், பொ.செந்தில்குமார், எம். செந்தில்குமார், ரமாதேவி செந்தில்குமார் எம்.சி, எம். கண்ணன் (எ) சாந்தகுமார், எம்.பெருமாள், எம்.கே. மோகனரங்கன் மற்றும் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அனை த்து அணிகளின் அமைப்பா ளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்ற னர்.

குடும்பத்தினர் ஆர். குமார், ஆர்.கிருஷ்ண மூர்த்தி, ஆர்.ராதா கிருஷ் ணன், ஆர்.புருஷோத்தமன், லலிதா கிருஷ்ணன் ஆகி யோர் அனைவரையும் வர வேற்கின்றனர்.





சென்னை மேற்கு மாவட்ட திமுக வழக்கறிஞர் அணியின் மாவட்ட, பகுதி மற்றும் கழக வழக்கறிஞர்கள் அனைவருக்கும் வழக்கறிஞர் அணியின் மாவட்ட அமைப்பாளர் வே.தேவேந்திரன் ஏற்பாட்டில் நேற்று 5.11.2026 மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு சீருடை மற்றும் இனிப்பு வழங்கினார். இதில் மாவட்ட தலைவர் சியாமளா, துணை தலைவர் பாலசந்தர், துணை அமைப்பாளர் கமலகண்ணன் மற்றும் கழக வழக்கறிஞர்கள் அனைவரும் பங்கேற்றனர்.

மீனவர்களின் உயிர்களைக் காவு வாங்கியது:

காசிமேடு மீனவச் சொந்தங்களின் இந்தக் கண்ணீர்க் குரல் தவெக அரசின் கையாலாகாத்தனத்திற்கு சாட்சியாக நிற்கிறது!

தி.மு.க. ஐ.டி.விங் சமூக வலைதளப் பதிவு!

சென்னை.நவ.6-

பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகத் திட்டத்திற்காக மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கத் துணிவது முதல், கடலில் உயி ருக்குப் போராடும் மீனவர்களைக் காப்பாற்ற வக் கில்லாமல் விட்டது வரை, மீன வச் சமுதாயத்தைத் தவெக அரசு வெறும் ஏமாளிகளாக வும், அலட்சியப்படுத்தப்பட வேண்டியவர்களாகவும்தான் பார்ப்பதன் காரணம் என்ன?

காசிமேடு மீனவச் சொந்தங் களின் இந்தக் கண்ணீர்க் குரல்



தவெக அரசின் கையாலாகாத் தனத்திற்கு சாட்சியாக நிற்கிறது!

கடலில் சிக்கிய மீனவர்கள் GPS Live Location-னுடன் "படகு மூழ்கப் போகுது" என்று SOS செய்தி அனுப்பி மீனவர் கள் கதறியும், "இரவு 6 மணி ஆகிவிட்டது, நாளைக்குத் தேடு வோம்" என்று ஆபீஸ் நேரக் கணக்கு பார்த்து மீனவர்களின் உயிர்களைக் காவு வாங்கியது தவெக அரசு!

உயிர்கள் கடலில் பலியான பிறகு, கேமராக்களுடன் காசி மேட்டிற்கு வந்த அமைச்சரைப் பார்த்து "உயிர் போன பிறகு தான் வருவீங்களா?" என்று மீனவப் பெண்கள் காறி உமிழ்ந்ததில் எந்தத் தவறும் இல்லை!

இவ்வாறு தி.மு.க. ஐ.டி.விங் கேள்வி எழுப்பியுள்ளது.

ஆடலுடன் பாடலை ரசித்ததற்கு

ஆட்சியையா பரிசாகத் தருவாய்?

(எண்சீர்விருத்தம்..)

மடமைக்கு மகுடம்..!
ஆரூர் புதியவன்

அருவருப்பாய் இருக்கிறது
தமிழா, உன்றன்
அறிவற்ற செயல்களினை
பார்க்கும்போது..

சிறுமைகளின் சேமிப்புக்
கிடங்காய் மாறி
சினிமா கூத்தாடிகளின்
செருப்பாய் ஆனாய்

பெருமைகளை
சாக்கடையில் வீசிவிட்டு
பேதமையை மகுடம் என
அணிந்து கொண்டாய்..

கருவறுக்கத் துடிக்கின்ற
கூட்டம் அங்கே..?
கவர்ச்சியிலே மயங்கும் நீ
பலியா டானாய்

✡✡✡

குருத்திலையில் புழு
விழுந்து அழிப்பதைப் போல்
குடப்பாலில் நஞ்சு துளி
கலப்பதைப் போல்

கருத்தியலை கவர்ச்சியிடம்
கைவிட் டாயே
களப்போரில் கலக்காமல்
போய்விட் டாயே..!

உருத்தெரியாமல்
நம்மை அழிப்பதற்கு
ஓநாய்கள் படையெடுக்கும்
வேளையில் நீ..!

கருத்தறியாமல் விழுந்தாய்
கவர்ச்சி மீது
கண்மூடித் தனத்தால்நீ
கரி யானாயே..!

✡✡✡

ஆடலுடன் பாடலினை
ரசித்த தற்கு
ஆட்சியையா பரிசாகத்
தருவாய்..? இந்தக்

கேடுகெட்ட புத்தியினால்
சீர ழிந்தாய்,
கீழ்த்தரமாய் அரசியலை
ஆக்கி விட்டாய்

பாடுபட்ட தலைவர்களை
மறந்த நீ தான்
பகட்டுகளை பசப்புகளை
கொலுவில் வைத்தாய்..

நாடு கெட்டுப் போனதற்கு
காரணம் யார்..?
நடிப்புக்கு நாடு தரும்
நீதான் அன்றோ..?



பேராசிரியர் முனைவர் ஜெ.ஹாஜாகனி,
பொதுச் செயலாளர், த.மு.மு.க.

அமெரிக்கத் தேர்தலில் ட்ரம்பின் குடியரசுக் கட்சிக்குப் பின்னடைவு:

உலகளவில் வலதுசாரி அரசியலுக்கு எதிராக வலுப்பெறும் ஜனநாயகக் குரல்!

மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா அறிக்கை!

சென்னை, நவ. 6 -

அமெரிக்க நாடாளு மன்றத்தின் பிரதிநிதிகள் சபை மற்றும் செனட் ஆகிய இரு அவைகளிலும் ஜனநாயகக் கட்சி பெரும் பான்மையைப் பெற்றிருப் பது, அதிபர் டொனால்ட் ட்ரம்பின் அரசியல் அணு குமுறைக்கும் அவரது நிர் வாகத்தின் கொள்கைக ளுக்கும் எதிராக அமெரிக்க மக்கள் அளித்துள்ள முக்கி யமான தேர்தல் தீர்ப்பாகும்.

போர் வெறி, மதவாத அரசியல், குடியேற்ற எதிர்ப்பு, சமூகப் பிளவுக ளைத் தூண்டும் அணுகு முறை, மக்கள் நலன்க ளைப் புறக்கணிக்கும் பொருளாதாரக் கொள் கைகள் ஆகியவற்றுக்கு எதிரான அதிருப்தி இந்தத் தேர்தலில் வெளிப்பட்டுள் ளது. குறிப்பாக, ஈரான் மீதான அமெரிக்கா-இஸ் ரேல் கூட்டுத் தாக்குதல் கள் குடியரசுக் கட்சியின் தோல்விக்கு ஒரு காரணம் என்பதை ட்ரம்பே ஒப் புக்கொண்டிருப்பது குறிப் பிடத்தக்கது.

இந்தத் தேர்தலின் வர லாற்றுச் சிறப்பு, மிச்சிகனில் டாக்டர் அப் துல் எல்சயீத் அமெரிக்க செனட் சபைக்குத் தேர்ந் தெடுக்கப்பட்ட முதல் முஸ்லிமாக உருவெடுத்தி ருப்பதாகும். பாலஸ்தீன மக்களின் உரிமைகளுக்கா கவும், இஸ்ரேலுக்கு நிபந் தனையற்ற ராணுவ உதவி வழங்குவதற்கு எதிராக வும் அவர் முன்வைத்த அர சியல் நிலைப்பாடு முக்கி யத்துவம் பெறுகிறது. பல இஸ்ரேல் ஆதரவு அமைப் புகளின் பெரும் நிதி செல் வாக்கை எதிர்கொண்டு அவர் பெற்ற வெற்றி அமெரிக்க அரசியலில் புதிய அத்தியாயத்தைத் திறந்துள்ளது.

நியூஜெர்சியில் டாக்டர்



ஆதம் ஹமாவி வெற்றி பெற்றிருப்பதும், ரஷிதா தலீப் மீண்டும் தேர்ந்தெ டுக்கப்பட்டிருப்பதும் பாலஸ்தீன ஆதரவு குரல்க ளுக்கு நாடாளுமன்றத்தில் கூடுதல் பிரதிநிதித்து வத்தை வழங்குகின்றன.

உலகின் பல்வேறு நாடு களிலும் அண்மைக்காலத் தேர்தல்களில் தீவிர வலது சாரி மற்றும் மதவாத அர சியல் சக்திகள் பின்னடை வைச் சந்தித்துள்ளன. இத்தகைய பின்னணியில் அமெரிக்கத் தேர்தல் முடி வுகளையும் உலகளாவிய அரசியல் மாற்றத்தின் ஒரு பகுதியாகப் பார்க்க வேண்டும். ஜனநாயகம், பன்மைத்துவம், சமூகநீதி, மனித உரிமைகள் ஆகிய வற்றை முன்னிறுத்தும் அர சியல் குரல்களின் முக்கி யத்துவம் அதிகரித்து வருகிறது.

அமெரிக்காவின் இரு அவைகளிலும் எதிர்க்கட் சியின் கட்டுப்பாடு உரு வாகியிருப்பது ட்ரம்பின் எஞ்சிய ஆட்சிக்காலத்தில் அவரது கொள்கைகளுக் குப் புதிய நாடாளுமன்றச் சவால்களை உருவாக்கும். போர் அரசியலுக்கும் இனப்படுகொலைக்கும் எதிராகவும், மக்களின் வாழ்வாதாரம் மற்றும் உரி மைகளுக்காகவும் ஜனநா யக வழியில் எழும் குரல்க ளுக்கு இந்தத் தேர்தல் முடிவுகள் கூடுதல் முக்கி யத்துவத்தை அளித்துள் ளன என்று எம்.எச்.ஜவா ஹிருல்லா எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

த.வெ.க. அரசின்

ரூ.200-க்கு சிறப்புத்தொகுப்பு!

பொதுமக்கள் ஏமாற்றம்!

சென்னை, நவ.6–

கூட்டுறவு அங்காடிகளில் தமிழ்நாடு அரசு அறிவித்த 200 ரூபாய் சிறப்புத்தொகுப்பு கிடைக்க வில்லை என்று பொதுமக்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல் கின்றனர்.

தமிழகத்தில் கூட்டுறவு அங்கா டிகளில் 200 ரூபாய் மதிப்பிலான சிறப்புத் தொகுப்பு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலை யில், பல கடைகளில் அந்தத் தொகுப்பு விநியோகிக்கப்பட வில்லை. மேலும், நியாயவிலைக் கடைகள் வாயிலாக காய்கறிகள் வழங்கப்படும் எனவும் அரசு அறி வித்திருந்தது. ஆனால், அறிவிக் கப்பட்டபடி காய்கறிகளும் கடை களுக்கு வரவில்லை என்றும் பொதுமக்கள் புகார் தெரிவித்துள் ளனர். அரசின் அறிவிப்பை நம்பி நியாயவிலைக் கடைகளுக்குச் சென்ற மக்கள், சிறப்புத் தொகுப் பும் கிடைக்காமல், காய்கறிகளும் கிடைக்காமல் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்லும் நிலை ஏற் பட்டுள்ளது.

இதேபோல், சென்னை, அண்ணா நகரில் உள்ள கூட்டுறவு மொத்த விற்பனை அங்காடியில் சிறப்பு தொகுப்பு வழங்கும் திட்டத்தில் பல்வேறு குளறுபடிகள் நடந்தன. அமைச்சரின் நிகழ்ச்சி யில் தொகுதி சட்டமன்ற உறுப்பி னர் ராஜா பங்கேற்கவில்லை.

மேலும், சிறப்பு தொகுப்பில் எந்தெந்த பொருட்கள் வழங்கப்படு கிறது என்ற தகவலும் அமைச்சர் காந்திராஜுக்கு தெரியவில்லை. ஒரு சிலர் 10 பைகள் வரை வாங் கிச் செல்வதால் அனைவருக்கும் சிறப்பு தொகுப்பு கிடைப்பதில்லை என்று பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.



தாம்பரம் மாநகராட்சி மாமன்றக் கூட்டம் மாநகராட்சி மைய அலுவலகம் மாமன்ற கூட்டரங்கில் மேயர் வசந்தகுமாரி கமலகண்ணன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் துணை மேயர் கோ. காமராஜ், மாநகராட்சி ஆணையர் ரா.சரண்யா, மண்டலக் குழுத் தலைவர்கள், நிலைகுழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டு மாநகராட்சியின் பல்வேறு வளர்ச்சி திட்டங்கள் குறித்து விவாதித்தனர்.

பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம்

மீனவர்கள் கடும் எதிர்ப்பு!

2-வது முறையாக கூட்டம் ஒத்தி வைப்பு!

சென்னை, நவ.6-

பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் கட்டுவது தொடர்பான கருத்துக்கேட்பு கூட் டம் என்பது வெறும் கண்துடைப்பு என்று மீனவர்கள் குற்றஞ்சாட்டி வரும் நிலையில், 2வது முறை யாக கூட்டம் ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

கடும் எதிர்ப்பையும் மீறி, சென்னை பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் கட்ட த.வெ.க. அரசு தன்னிச்சையாக முடிவு செய் துள்ளது. இதற்கான அரசாணை வெளியிடப்பட்டு, தேர்வு செய்யப் பட்ட இடத்தில் உள்ள வீட்டு வசதி வாரிய குடியிருப்புகளை இடிக்க ஒப் பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. தங் கள் வாழ்வாதாரத்தை அழிக்கும் நோக்கில் பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் கட்ட முற்பட் டால் மிகப்பெரிய போராட்டம் வெடிக் கும் என அவர்கள் எச்சரிக்கை விடுத் துள்ளனர்.

புதிய தலைமைச் செயலகம் கட்டுவது தொடர்பான கருத்துக்கேட்பு கூட்டம் என்பது வெறும் கண் துடைப்பு என்று குற்றஞ்சாட்டி மீன வர் சங்கங்கள் தொடர் போராட்டத் தில் ஈடுபட்டு வருகின்றன.

இந்த நிலையில், புதிய தலை மைச்செயலகம் கட்டுவதற்கான கருத்துக்கேட்பு கூட்டம் 2வது முறை யாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ஏற் கனவே கடந்த செவ்வாய்க்கிழமை கருத்துக்கேட்பு கூட்டம் நடைபெறு வதாக அறிவிக்கப்பட்டு, மீனவர்களின் எதிர்ப்பால் ஒத்திவைக்கப்பட்ட நிலையில் மீண்டும் தள்ளிவைக்கப் பட்டுள்ளது. பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் வராது என செய்தியை பரப்பிவிட்டு தலை மைச் செயலகம் கட்ட அரசு தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும், முதலமைச்சர் மற்றும் அமைச்சர் களின் பேச்சுகள் முன்னுக்குப்பின் முரணாக உள்ளதாகவும் மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

ஆண்டியும் போண்டியும்



ஆண்டி : ஏன்ய்யா; 'த.வெ.க. ஆட்சியை கவிழ்க்க தி.மு.க. சதி'ன்னு 'கலெக்சன்' குமார் சொல்லி இருக்காரே! படிச்சியா?

போண்டி : ஆமாய்யா; ஆடத் தெரியாதவள் மேடை கோணல்னு சொல்ற மாதிரி, ஒழுங்கா ஆட்சி நடத்த வக்கில்லாதவங்க அப்படித் தான் பேசுவாங்க! அதுக்கு மேலேயும் பேசுவாங்க! விட்டுத் தள்ளுய்யா.